

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.2.2026) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில், உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச்.ராஜா அவர்களின் உடல்நலம் குறித்து குடும்பத்தினரிடம் கேட்டறிந்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.2.2026) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில், உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மாணிக்கம் அவர்களை சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# புதுக்கோட்டையில் “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பொதுக்கூட்டம்!

## பொன்.முத்துராமலிங்கம்- அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, பிப். 3 –

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி சார்பில்தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம்இன்று (03.02.2026–செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் டாக்ஸி மார்கெட் புதுக்கோட்டையில் , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர்கே.கே.செல்லபாண்டி யன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர், துணை மேயர் எம்.லியாகத்அலி மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர், கறம்பக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளர் தவ.பாஞ்சாலன், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது.

மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், திலகவதி செந்தில்,அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி.என்.மணி, அரு.வீரமணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலைசெ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா,க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, கீரை.தமிழ்ராஜாசு.சண்முகம், கார்த்திகேயன் வேல்சாமி, டாக்டர் சி.குறிஞ்சிவாணன், பூங்குடி எம்.சிவக்குமார், மாநகர கழக நிர்வாகிகள்: அரெத்தினம், ப.ரெங்கராஜன், மா. மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு(எ) ஷாஜகான் ஏ.இராமலிங்கம், ஆஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க. அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் பொன்முத்துராமலிங்கம்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலஎர் இயற்கை வளங்கல் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், தலைமை கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், என்.சேட்டு, எம். பரமசிவம், மு.பி.ம. சத்தியசீலன், வெ.முத்துகிருஷ்ணன். ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, தென்னலூர் எம்.பழனியப்பன், மா.தமிழ்அய்யா, ஓ.எஸ். வெங்கடாசலம், அ.இளங்குமரன், சி.சண்முகம். கே.பி.அய்யப்பன்.

எம்.கோவிந்தராஜன், வை.விஜயகுமார், உமுருகேசன், பி.அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகமது ரிஷ பொறுக்குழு உறுப்பினர்கள் என். சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர். செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, எம்.செந்தில்குமார் கழக முன்னோடிகள் மு.பி.மணி. வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி,திருஞானசம்பந்தம், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, ஆர்.பாலகிருஷ்ணன், இராம.செல்வராஜ், ராய.முத்துக்குமார், கழக , முன்னாள் ஒன்றிய பெருத்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள் பேருராட்சி தலைவர்கள் ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன் பாண்டிச் செல்வி கே.ஆர்.என்.போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா,

மாலா ராஜேந்திரதுரை, லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்கசிங்கம், கை.பழனிச்சாமி, ஜெயமீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், எம்.ஏ.எம்.இம்தியாஸ், இ.செந்தில்ராஜா, எம். நைனா முகம்மது, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், கே. எஸ்.ச.இளையச்சூரியன், டி.சூசைராஜ், கே.கணபதி, புத்தாம்பூர் எம்.சுப்பையா, டாக்டர் மு.க.முத்து க்கருப்பன், அ.பிரபா, செந்தாமரை பாலு, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, பொன்.பாரி வள்ளல், வி.என்.எம்.பாலு, சி.அரங்கநாயகம், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், க.கவிவேந்தன், தவசுமணி, எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், ஆர்.டி.ஆர்.ராமசாமி, கா.இளவரசன், என். வீரைய்யா, எம்.ராஜா, எம்.வேலுச்சாமி, ஆர்.முரளிதரன், இ.பி.சண்முகம், மு.கலைஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி எம்.சிவா, முகம்மது அன்சாரி பாஷித் , மாநகர இளைஞரணி நிர்வாங்கள் செ.கணேஷ், ஆர்.ஹரிஹரன்.நா.ஞானவேல், சி.ஷெரால்டு, மா. மகேந்திரன், என்.தன்வீர் முகம்மது. ஆ.மணிபாரதி, க.பாண்டியராஜன், கார்த்திக், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள்: பழையூர் ஆர்.ராமசாமி, ஜெ.அசரப் அலி, மணிமொழி மனோகரன், கி.சுப்பிர மணியன், எம்.காதர்கனி, கமலா செல்வம், சுமோ பாலு (எ) பாலகிருஷ்ணன், ஏ.வெற்றி ச்செல்வன், பா.ஹரிஹரன், வழக்கறிஞர் அ.ரவிச்சந்திரன், கீரை ஆ.ராஜேந்திரசோழன் கவிஞர் மரிய எட்வின், புல்வயல் ஏ.சுந்தர்ராஜன், என்.ஆர்.பரிமளம், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், வை. ஆதிமூலம், கே.பி.எல்,மகேந்திரன், மெஸ் மூர்த்தி, ராஜகோபாலபுரம் ஆர்.செந்தில்குமார், மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.க.ராம கிருஷ்ணன், புதுக்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்

### நடப்பாண்டில் தருமபுரி – கிருஷ்ணகிரி – ஈரோடு – சேலம் மாவட்டங்களில்

# கேழ்வரகு கொள்முதல் ஆரம்பம் - ஒரு மெட்ரிக் டன் ரூ.48.860-க்கு விற்கலாம்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

**சென்னை, பிப்.3 –**

**நடப்பாண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1–ஆம் தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்மாவட்ட விவசாயிகள் கேழ்வரகினை மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48,860/ என்ற விலையில் நடப்பு ஆண்டு ஆகஸ்ட் 31 வரை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்று பயன்பெற உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



**உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–**

*பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கேழ்வரகு கொள்முதல் செய்யும் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.*

*2023-2024 கொள்முதல் பருவத்தில் கூடுதலாக ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சேர்த்து, 4 மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து, கடந்த 2024-2025 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தில், நடப்பு 2025-2026 கொள்முதல் பருவத்தில் மெட்ரிக் டன் ஒன்றிற்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.48,860/ வழங்கப்படுகிறது. இது கடந்த கொள்முதல் பருவ குறைந்தபட்ச ஆதார விலை ரூ.42,900/ ஐ விட மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5,960/ கூடுதலாகும்.*

*மேலும், நடப்பு 2025-2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையம் திறந்து விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டது.தற்சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 9 நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இதுவரை 630.050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 351 சிறு குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

*மேலும், நடப்பு 2025-2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் கேழ்வரகு விவசாயிகள் பயன் பெற ஏதுவாக, கேழ்வரகு கொள்முதல் கால வரம்பு 31.8.2026 வரை நீட்டித்து வழங்க தமிழ்நாடு அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டு,மேற்படி மாவட்டங்களில், நேரடி கேழ்வரகு கொள்முதல் தற்போது, 01.02.2026 முதல் 31.08.2026 வரை கால நீட்டிப்பு செய்து கேழ்வரகு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*எனவே, இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் திறக்கப்படும் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.*

